# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1201/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பிரதீப் | த–பெ | கண்ணய்யா |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 30/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கட்டிட பொறியாளர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025**

**எதிரி ஆஜர் இல்லை.மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

**<u>முதல் விசாரணை.</u>**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கட்டிட பொறியாளராக உள்ளேன். அசா1 ஐ தெரியும். எதிரியை தெரியாது. கடந்த 21.12.2019 அன்று காலை 9.00 மணிக்கு மேல் நான் வீட்டில் இருந்தேன். பக்கத்து வீட்டில் இருந்த அசா1 சத்தம் போட்டார். நான் உடனே சென்று பார்த்தபோது இன்னொரு நபர் அவரை அடித்துக்கொண்டிருந்தார். கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தார். கம்பியை கொண்டு அசா1 ஐ அடித்தார். நான் அதனை தடுத்தேன். அடிவாங்கிய ராதா என்பவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் எந்த மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அப்போது நடந்த விபரங்களை சொன்னேன்.

**குறுக்குவிசாரணை**

இன்னொரு நபர் அசா1 ஐ அடித்தார் என்று சொல்லியிருக்கிறேன் அந்த இன்னொரு நபர் யார் என்றால் எனக்கு தெரியாது. அசா1 கடப்பாறையால் குத்தினார் என்று சொல்வதும் நான் கம்பியால் அடித்தார் அதை நான் பார்த்தேன் இதில் எது உண்மை என்றால் நான் சொல்வது தான் உண்மை. சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் முன்னால் அடித்தது தெரியாது ஆனால் சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.07 12:32:04 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1201/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராதா | க–பெ | அண்ணாமலை |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 42/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | புதுக்கோட்டை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025**

**எதிரி ஆஜர் இல்லை.மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எனது கணவரின் தம்பிக்கும் எனக்கும் காரைக்குடியில் இருக்கும் சொத்துக்குறித்து பிரச்சனை இருந்து வந்தது. 21.12.2019 அன்று நான் வீட்டின் உள்ளே இருந்தேன். சத்தம் கேட்டவுடன் நான் வெளியே வந்து எனது கணவரின் தம்பி இடம் கேட்டேன். அப்போது அவர் என்னைப்பார்த்து தேவுடியா அவளை இவளை என்று திட்டினார். உன்னை கொல்வதற்காக தான் வந்திருக்கிறேன் என்று சொல்லி வீட்டில் இருந்த கடப்பாறை கம்பியை கொண்டு எனது இடது மற்றும் வலது கால்களில் அடித்தார். நான் வழியில் விழுந்துவிட்டேன். நான் கத்தியவுடன் ராஜேஸ்வரி, பிரதீப் ஆகியோர்கள் வந்து அவரிடம் இருந்து கம்பியை பறித்தார்கள். பின்னர் பழைய காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தேன். புகார் அசாஆ1. என்னை தாக்கிய நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காணமுடியும். அவர் எனது கணவரின் தம்பி தான்.

**குறுக்கு விசாரணை**

எனது கணவரின் தம்பி என்ன வேலை செய்கிறார் என்றால் வெளிநாட்டில் உள்ளார். எவ்வளவு நாட்களாக வெளிநாட்டில் இருக்கிறார் என்றால் 20 வருடமாக வேலை செய்கிறார். எனது கணவர் சம்பவ சமயத்தில் எங்கு இருந்தார் என்றால் மலேசியாவில் இருந்தார். புகாரில் என் கணவருக்கும் அவர் தம்பிக்கும் சொத்து பிரச்சனை உள்ளது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகளின் வீடுகள் எங்கு உள்ளது என்றால் எனது வீட்டிற்கு கொஞ்சம் தள்ளி அவர்கள் வீடு உள்ளது. எனது கணவருக்கு சரியான வேலை இல்லை சரியான சம்பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் தம்பி அதிகமாக சம்பாதிக்கிறார் என்று எனக்கும் எனது கணவருக்கும் பொறாமை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் எனது கணவரின் தம்பி ஊரில் இல்லை என்றால் சரியல்ல. எனது வீட்டில் தோட்டம் உள்ளதா என்றால் ஒரே ஒரு மரம் மட்டும் உள்ளது. எனது வீட்டில் உள்ள

கடப்பாறைறை வைத்து நான் வேலை செய்தபோது என்னால் ஏற்பட்ட காயம் தான் என்றால் இல்லை. எதிரி மீது கொண்ட பொறாமையின் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.07 12:32:10 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி